Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 44

வெள்ளிக்கிழமை
09 ஜனவரி 2026

மார்கழி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

## கண்டியில் நிலநடுக்கம்


கொழும்பு, ஜன. 9
கண்டி மாவட்டத்தில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்றும், ரிக்டர் அளவுகோலில் 2.2 அலகுகளாக இந்த நிலநடுக்கம் பதிவானது என்றும் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. »11

# இடரை எதிர்கொள்வதற்கு யாழ்ப்பாணம் தயார்நிலை!

### இடர்முகாமைத்துவப் பிரிவு அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஜனவரி 9**
**வங்காள விரிகுடாவின் தென்கிழக்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாக, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடர்கள் நேர்ந்தால், அதை எதிர்கொள்வதற்கு முழுமையான தயார்ப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்தார்.** »11





## அம்பாந்தோட்டைக்கு அருகாக தாழமுக்கம் கரை கடக்கலாம்

### வளிமண்டலவியல் திணைக்களத்தின் நேற்றைய இரவு அறிக்கையில் தகவல்

கொழும்பு, ஜன. 9
இலங்கைக்குத் தென்கிழக்காக வங்காள விரிகுடாவில் நிலைகொண்டுள்ள விருத்தியடைந்த தாழமுக்கம், அம்பாந்தோட்டை - கல்முனை இடையே »11

## இடர்நிலையை எதிர்கொள்வதற்கு பிரதேசங்கள் தோறும் ஏற்பாடுகள்

### யாழ். மாவட்டச் செயலர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 9
வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றழுத்தத் தாழ்வு நிலையால், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடர் நிலை ஏற்படின், அதை எதிர்கொள்வதற்கு பிரதேச செயலகங்கள் ரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள் »11

## பிரதமர் ஹரிணியை நாம் பாதுகாப்போம்!

### ஆளுங்கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஜன. 9
பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை நிச்சயம் தோற்கடிக்கப்படும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கையில் ஏற்பட்ட »11



முச்சந்தி மூரளி

“எங்க கடந்தாலும் கடுஞ்சேதாரத்தை தராமல் கடந்தால் தான் நிம்மதி கண்டியளோ”

கடற்படையின் பிடியிலுள்ள

## முள்ளிக்குளம் கிராமம் மிகவிரைவில் விடுவிப்பு

### ஜனாதிபதி அநுர இணக்கம்

கொழும்பு, ஜன.9
கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மன்னார் - சிலாவத்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமத்தை விரைவில் விடுவிப்பதற்கு ஜனாதிபதி அநுர இணக்கம் தெரிவித்துள்ளார். கடற்படையும் இந்த முடிவுக்குச் சம்மதம் தெரிவித் »11

## ஜனவரி 15 ஆம் திகதி வடமாகாணத்தில் அநுர

யாழ்ப்பாணம், ஜன. 9
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பொங்கல் பண்டிகையான எதிர்வரும் 15ஆம் திகதியன்று யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்குப் பயணம் »11



## காணிகள் விடுவிப்பு; அறிவிப்பார் அநுர!

யாழ்ப்பாணம், ஜன. 9
ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களுக்கு எதிர்வரும் 15ஆம் திகதி பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், காணி விடுவிப்புத் தொடர்பில் விசேட »11



## கச்சதீவுப் பெருவிழாவில் இம்முறை 8,000 பக்தர்கள் பங்கேற்க வாய்ப்பு!

### முன்னாயத்தக் கூட்டத்தில் தகவல்

யாழ்ப்பாணம், ஜன. 9
கச்சதீவு புனித அந்தோனியார் பெருவிழாவில் இம்முறை 8 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்ற முன்னாயத்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

கச்சதீவு அந்தோனியார் பெருவிழாவை பெப்ரவரி மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பான முன்னாயத்தக் கூட்டம், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் மாவட்டச் »11

## ஊடகப் படுகொலைகள்; விசாரணைகள் நிச்சயம்

### அமைச்சர் பிமல் உறுதி

கொழும்பு, ஜன. 9
ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டமை மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு, நிச்சயம் நீதி நிலைநாட்டப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தின் நேற்றைய அமர்வின்போது, ஊடகவியலாளர் லசந்த »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4310 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 28 55 67 68 |
| விசேட எழுத்து | M |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1377 |
| வெற்றி இலக்கினம் | சிம்மம் |
| வெற்றி இலக்கங்கள் | 07 14 48 50 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0336 |
| ஆங்கில எழுத்து | H |
| வெற்றி இலக்கங்கள் | 6 3 4 4 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2416 |
| ஆங்கில எழுத்து | M |
| சுப்பர் இலக்கம் | 14 |
| வெற்றி இலக்கங்கள் | 06 36 53 58 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6068 |
| ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கங்கள் | 3 3 9 6 7 3 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2098 |
| ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கங்கள் | 27 56 66 71 |
| விசேட எழுத்து | T |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0184 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 28 29 62 |

# பழைய தேர்தல் முறைமையின்கீழ் தேர்தல் நடத்துவதே சாத்தியமானது

## பேராசிரியர் சர்வேஸ்வரன் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.9**

**அவசியமான சட்ட திருத்தங்களைக் கொண்டுவந்து பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று கொழும்பு சட்டபீடத்தின் பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடந்த பல ஆண்டுகளாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவில்லை. ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆளுநர்களால் மாகாணசபைகள் நிர்வகிக்கப்பட்டுவருகின்றன. இது அரசமைப்புக்கு மாறானது. மக்களின் ஜனநாயக உரிமையைமீறும் செயற்பாடு.

புதிய தேர்தல் முறைமையின் கீழ் எல்லை நிர்ணயம் செய்யப்படாமையைக் காரணம் காட்டி மாகாணசபைத் தேர்தல் பிற்போடப்பட்டுவருகின்றது. எல்லை நிர்ணயம் செய்து மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்துவது சாத்தியமான விடயம் அல்ல. சட்டதிருத்தங்களைக் கொண்டுவந்து பழைய முறைமையின்கீழ் மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் - என்றார். (எ-27)

# நன்கொடையாளர் மாநாட்டை விரைவாக நடத்தவேண்டும்!

## மீண்டும் சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஜன.9

டித்வா சூறாவளியால் நாட்டுக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் விரைவாக சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:

அரச தரப்பில் இருக்கும் பலர் எதைக் கூறினாலும், இந்த இழப்பை எதிர்கொண்டு, அதைத் தாண்டி வேகமாக முன்னேறுவதற்கு சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்ட வேண்டிய தேவைப்பாடு எமக்கு உள்ளது. அரசாங்கம் இதில் அலட்சியமாக இருப்பது போலவே தெரிகிறது.

உலக வங்கி நடத்திய மதிப்பீட்டின் பிரகாரம், உட்கட்டமைப்பு வசதிகளில் மட்டும் 4.1 பில்லியன் இழப்பு ஏற்பட்டுள்ளது. நமது நாடு இதுவரை பெற்றுள்ள நன்கொடைத் தொகை ஒரு பில்லியன் அமெரிக்க டொலரையே நெருங்கியுள்ளது.

அதனால் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்டுங்கள். தாமதமின்றி உலகின் கவனத்தை நாட்டின் பக்கம் திருப்பிக் கொள்ளுங்கள். சர்வதேச நாணயநிதியத்துடன் பேச்சு நடத்தி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள் - என்றார். (எ-44)

# ஐ.ம.சக்தியின் செயற்குழு உறுப்பினராக சரித ஹேரத்

கொழும்பு, ஜன.9

பேராசிரியர் சரித ஹேரத் ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்துகொண்ட அவர், சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்காக கட்டுகம்பொல தேர்தல் தொகுதியின் அமைப்பாளராகப் பணியாற்றி தமது ஆதரவை வழங்கியிருந்தார்.

பேராசிரியர் சரித ஹேரத்தின் அர்ப்பணிப்பைப் பாராட்டும் விதமாக, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தீவிரசிகிச்சையில் பாரதிராஜா

சென்னை, ஜன.9

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள இயக்குநர் பாரதிராஜா தொடர்ந்தும் தீவிர மருத்துவக் கண்காணிப்பில் சிகிச்சைபெற்றுவருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் மூச்சுத்திணறல் ஏற்பட்டதை அடுத்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அவருக்குத் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. (ச-100)

| சுபிரி தன சம்பத | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0776 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கம் | 7 5 8 7 4 7 |

| Super Ball | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3042 |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 17 45 50 68 |

| சனிதா | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கம் | 12 26 35 49 |
| வெற்றி வாரம் | 5203 |

| SASIRI | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0872 |
| வெற்றி இலக்கம் | 26 35 44 |

| லக்ன ராசி | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| மேஷம் | |
| வெற்றி இலக்கம் | 29 30 53 57 |
| சீட்டிழுப்பு வாரம் | 4754 |

| KAPRUKA | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 29 |
| வெற்றி இலக்கம் | 04 16 38 56 |
| வெற்றி வாரம் | 2218 |

| அத கோடிபதி | |
|---|---|
| திகதி | 08.01.2026 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கம் | 36 42 69 72 |
| வெற்றி வாரம் | 2868 |



# பிரதமருக்கு எதிரான பிரேரணைக்கு மொட்டு ஆதரவு

கொழும்பு, ஜன.9

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பிரதமருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியால் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் கல்விக் கட்டமைப்பு சீர்குலைய இடமளிக்க முடியாது. நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் பிரதமர் உள்ளிட்ட தரப்பினருடன் பேச்சு நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-44)

# யாழ்.மாவட்ட பால் உற்பத்தி 'ஜெய்க்கா' நிறுவனம் ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாண மாவட்டத்தில் பால் உற்பத்தியில் ஈடுபட்டுவரும் கூட்டுறவுச் சங்கங்களின் பால் உற்பத்தியின் தரம், மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக ஜெய்க்கா நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் வருகைதந்து ஆராய்ந்துள்ளனர்.



யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு வருகைதந்த ஜெய்க்கா நிறுவனத்தின் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் திருமதி நகயாமா அட்சுகோ, சிரேஷ்ட நிபுணர் பரமேந்திரன் மற்றும் மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே. சந்திரசேகரன் ஆகியோர் கள ஆய்வுகளை மேற்கொண்டனர். 'யாழ்கோ' பால் உற்பத்தியைப் பார்வையிட்ட இந்தக் குழுவினர் பால் உற்பத்தி தொடர்பான பயிற்சிகள், தரமேம்பாட்டு நடவடிக்கைகள், தொழில்நுட்பத்திகள் போன்றவற்றுக்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளனர். (ச-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில்

# புகையிலை, சிகரெட் பயன்பாடு ஆண்டுதோறும் 22,000 இறப்பு

**கொழும்பு, ஜன.9**
**இலங்கையில் புகையிலை, சிகரெட் பயன்பாடு காரணமாக ஆண்டுதோறும் சுமார் 22,000 மரணங்கள் பதிவாகின்றன என்று மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையம் தெரிவித்துள்ளது.**

'இலங்கையின் புகையிலை கட்டுப்பாட்டு முயற்சிகளில் புகையிலை தொழிற்றுறையின் தலையீடுகள்' என்ற தலைப்பிலான ஊடகவியலாளர் சந்திப்பில் புகையிலை மற்றும் மதுசாரம் மீதான தேசிய அதிகாரசபையின் தலைவர் மருத்துவர் ஆனந்த ரத்நாயக்க மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் நிகழும் மரணங்களில் 83 வீதம் தொற்றாநோய்களினால் ஏற்படுகின்றன. இவற்றுக்கான பிரதான நான்கு காரணிகளில் ஒன்றாகப் புகையிலைப் பயன்பாடு அடையாளம் காணப்பட்டுள்ளது. இலங்கையில் சுமார் 1.5 மில்லியன் (15 இலட்சம்) பெரியவர்கள் புகைத்தல் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளனர்.

அதேவேளை உலகில் ஒவ்வொரு 6 விநாடிகளுக்கும் ஒரு மரணம் புகையிலைப் பயன்பாட்டினால் ஏற்படுகின்றது - என்றார். (ச-இ)



## காலபோக அறுவடை கிளிநொச்சியில் ஆரம்பம்

கிளிநொச்சி, ஜன.9
கிளிநொச்சி மாவட்டத்தில் 2025 - 2026 காலபோக நெற்செய்கை அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப்பாசனக் குளமாகிய இரணைமடுக்குளம் மற்றும் ஏனைய சிறுகுளங்கள் உள்ளடங்கலாக 70,000க்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.
தற்போது மாவட்டத்தின் சில பகுதிகளில் நெல் அறுவடையை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். அக்கராயன்குளம், பெரிய குளம் போன்ற பகுதிகளில் சில வயல் நிலங்களில் நெல் அறுவடையில் விவசாயிகள் ஈடுபடுபட்டுள்ளனர். எனினும் எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (ச-113)

## போத்தல் கள் விலை இவ்வருடம் உயரும்

யாழ்ப்பாணம், ஜன.9
பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்திசெய்யும் போத்தல் கள்ளின் விலை இந்த வருடம் அதிகரிக்குமென சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த வருடங்களில் போத்தல் கள் உற்பத்திக்கு அறவிடப்பட்ட வரி இந்த வருடம் 3 மடங்காக அதிகரித்துள்ளதென அரசினால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய சங்கங்களால் இவ்வருடம் உற்பத்தி செய்யப்படும் போத்தல் கள்ளின் விலை அதிகரிக்கலாமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)

## மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறையால் பறிபோகும் உயிர்கள்

கொழும்பு, ஜன.9
கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட காப்பாற்றப்படக்கூடிய நோயாளிகளில் சுமார் 30 சதவீதம் பேர் அநாவசியமாக உயிரிழக்கின்றனர். கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சிகிச்சை அளிக்கத் தேவையான 'இமேஜ் கைடட் ரேடியேஷன் தெரபி' உபகரணங்கள் இல்லாததால் இந்த உயிரிழப்புகள் பதிவாகின்றன என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.
கர்ப்பப்பைவாய்ப் புற்றுநோய் நோயாளிகள் ஆரம்ப நிலையிலேயே சிகிச்சை பெற்றால், சத்திரசிகிச்சை மற்றும் பிற சிகிச்சை முறைகள்மூலம் புற்றுநோயைக் குணப்படுத்தமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## வெற்றிலைத் துப்பல்: இனிச் சட்டம் பாயும்!

### சாவகச்சேரியில் நடைமுறை

யாழ்ப்பாணம், ஜன.9
சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பொது இடங்களில் வெற்றிலை மென்று உமிழ்வது மற்றும் வீதியோரங்களில் குப்பை கொட்டுவது ஆகியன கடந்த முதலாம் திகதி முதல் தடைசெய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அதன்படி வெற்றிலை மென்று பொது இடங்களில் துப்புவோருக்கு முதல்முறை மன்னிப்புடன் 2 ஆயிரம் ரூபாவும், மீண்டும் செய்தால் 5 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்படும்.
வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சேரும் குப்பைகளை சபையின் கழிவகற்றல் வாகனத்தில் ஒப்படைக்காது வீதியோரத்தில் குப்பை கொட்டுவது கண்டுபிடிக்கப்பட்டால் முதற்தடவை 5 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் தடவை 10 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்படும்.
நகரப்பகுதி வடிகாலுக்குள் குடியிருப்புகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சேரும் கழிவுநீரை வெளியேற்றுவது குற்றமாகும். இவ்வாறான தவறுகளைச் செய்யும் குடியிருப்பாளர் மற்றும் வர்த்தக நிலையங்களை நடத்துவோருக்கு முதற்தடவை 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் தடவை 20 ஆயிரம் ரூபாவும் தண்டமாக விதிக்கப்படுமென தவிசாளர் அறிவுறுத்தியுள்ளார். (ச-41-9)

## ஆருக்குப் பதவி?

கலியாணம் சொர்க்கத்தில நிச்சயிக்கப்படுமெண்டு சொல்லுவினம். அதைமாதிரி கம்பஸ் நியமனங்கள் கட்சி ஒப்பிஸிலதான் நிச்சயிக்கப்படுகுது போல. முந்தின காலத்தில யாழ்ப்பாணக் கம்பஸில ஆருக்கும் வேலை வேணுமெண்டால் வீணைக்காரர் இருக்கிற தியேட்டர் ஒப்பீஸுக்குத்தான் எல்லாரும் ஓடுவினம். கம்பஸில தன்ர கை ஓங்கவேணும் எண்டதுக்காக வீணைக்காரரும், தன்ர செல்வாக்கைப் பாவிச்சு அவைக்கு வேலையையோ இல்லாட்டி புறமோசனையோ வாங்கிக் குடுத்திடுவார். அதுக்குப் பிறகு அவையள் வீணைக்காரரின்ர விசுவாசியளா மாறிடுவினம். இந்த 'டீல்' ரண்டு தரப்புக்கும் ஆதாயம். இப்பிடித்தான் இவ்வளவுநாளும் போய்க்கொண்டிருந்தது. ஆனால் பிறகு வீணைக்காரரின் செல்வாக்கு, திசைகாட்டிக்காரர் ஆட்சிக்கு வந்தபிறகு செல்லாக்காசாப் போட்டுது.

ஆட்சிமாற்றத்துக்குப் பிறகு உந்தக் கட்சியளின்ர தலையீடு இல்லாமல், எல்லாம் நியாயமா நடக்குமெண்டுதான் எல்லாரும் நினைச்சவை. ஏனெண்டால், திசைகாட்டிக்காரர் தங்களை சுத்தமான சூசைப்பிள்ளையள் மாதிரித்தான் சொல்லிக்கொண்டவை. ஊழலில்லாத நாடு எண்டதுதான் அவையின்ர நோக்கம். அப்பிடிப்பட்டவை முந்தி ஆட்சி அதிகாரத்தில இருந்த கட்சியள் செய்த ஊத்தைவேலையளைச் செய்யமாட்டினம் தானே. ஆனால் அப்பிடியொண்டுமேயில்லை, நாங்களும் அதே ஊத்தை அரசியல் குட்டைக்குள்ள ஊறின மட்டையள்தான் எண்டதைக் கொஞ்சம் கொஞ்சமா நிரூபிச்சுக்கொண்டு வருகினம். இப்ப திசைகாட்டிக்காரர் கம்பஸ் விசயங்கள் எல்லாத்துக்கையும் மூக்கை நுழைச்சு, தாங்கள் நினைச்சபடி ஆட்டுவிக்கப் பாக்கினம்.

யாழ்ப்பாணக் கம்பஸுக்கு புதுத் துணைவேந்தர் பதவிக்கு மூண்டுபேரை சிபார்சு செய்து, அதில ஒராளை ஜனாதிபதி செலக்ட் பண்ணுவார். அப்பிடி இந்த முறை அநுரகுமார, ஆரைச் செலக்ட் பண்ணப் போறார் எண்டு எல்லாரும் ஆவலோட பார்த்துக் கொண்டிருக்கினம். ஆனால் அநுரகுமார செலக்ட் பண்ணமுதலே, யாழ்ப்பாணத் திசைகாட்டி ஒப்பீஸில அடுத்த துணைவேந்தர் ஆர் எண்டு அறிவிச்சிருக்கினம். கிட்டடியில அந்தக் கட்சி ஒப்பீஸில நடந்த கூட்டத்தில நல்லூர் ஏரியாவுக்கு ஒருங்கிணைப்பாளரா ஒரு பேராசிரியரை திசைகாட்டிக்காரர் நியமிச்சிருக்கினம். (அண்டைக்கு பேராசிரியர் கூட்டத்துக்குப் போகேலை) அப்ப இன்னொரு மெம்பர் எழும்பி "அவர் நல்லவர் வல்லவர், நல்லூருக்குப் பொறுப்பா அவரைப் போட்டமாதிரி கம்பஸுக்கும் அவரைத்தான் துணைவேந்தராப் போடோணும்" எண்டு அவர் வாழ்த்துப் பாட வெளிக்கிட்டிருக்கிறார். அப்ப யாழ்ப்பாணத்தில திசைகாட்டியின்ர செயற்பாடுகளுக்குப் பொறுப்பா இருக்கிறவர் "நீ சொன்னாலும் சொல்லாட்டியும் அவரைத்தான் துணைவேந்தராப் போடப்போறம். ஆனால் இதுவரை அவரை நீ ஒருத்தன் தான் இப்பிடி நல்லமாதிரிச் சொல்லியிருக்கிறாய்" எண்டு சொல்லிச் சிரிச்சாராம். அப்ப கட்சிக்குப் பணிவிடை செய்ததால, கட்சியிலயும் பதவி குடுத்து, கம்பஸுக்கும் துணைவேந்தராப் போடப் போகினம். இப்ப சொல்லுங்கோ, முந்தின அதிகாரக் கட்சியளுக்கும் திசைகாட்டிக் காரருக்கும் என்ன வித்தியாசம் எண்டு?

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலப் புத்தாண்டு ராசிபலன்



## துலாம்

சீர்திருத்தச் சிந்தனையும், தவறுகளைத் தட்டிக்கேட்கும் தைரியமும் கொண்ட நீங்கள், அடித்தட்டு மக்களுக்கு உதவும் குணம் கொண்டவர்கள்.

உங்கள் ராசிக்கு 8ஆவது ராசியில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பதால் ஆடம்பரச் செலவுகளைக் குறையுங்கள். சிலருக்குச் சொந்த வீடு வாங்கும் கனவு பலிக்கும். வி.ஐ.பி.களின் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். தடைபட்டுக்கொண்டிருந்த சில காரியங்களை முழு மூச்சுடன் முடிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் உண்டாகும். தம்பதிக்குள் வீண் சந்தேகம் வேண்டாம். மகளின் திருமணத்தை வெகு விமர்சையாக நடத்திமுடிப்பீர்கள். குடும்பத்தினருடன் சென்று பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். பழைய வாகனத்தை மாற்றுவீர்கள். அண்டை அயலாரின் ஆதரவு கிடைக்கும். யாரிடமும் குடும்ப இரகசியங்களைப் பேசிக்கொண்டிருக்காதீர்கள்.

1.1.2026 முதல் 31.5.2026 வரை குருபகவான் ராசிக்கு 9ஆம் வீட்டில் நிற்பதால் வீடு, வாகனம் வாங்குவீர்கள். திடீர்ப்பணவரவு உண்டு. சிலருக்கு ஷேர் மார்க்கெட்மூலம் பணம் வரும். 1.6.2026 முதல் 14.10.2026 வரை குருபகவான் ராசிக்கு 10ஆம் வீட்டுக்குச் செல்வதால் உத்தியோகத்தில் பணிச்சுமை அதிகமாகும். இடமாற்றம் உண்டு. சேமிப்புகள் கரையும். குடும்பத்தில் வீண்சச்சரவுகள் எழாதபடி பார்த்துக் கொள்ளுங்கள்.

14.10.2026 முதல் 31.12.2026 வரை குருபகவான் ராசிக்கு இலாப வீட்டுக்குச் செல்வதால் வற்றிய பணப்பை நிரம்பும். தம்பதிக்குள் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

1.3.2026 முதல் 25.3.2026 வரை 6ஆம் வீட்டில் சுக்கிரன் மறைவதால், நெஞ்சு எரிச்சல், வாயுக் கோளாறு, செரிமானப் பிரச்சினை வரக்கூடும். வறுத்த, பொரித்த உணவுகளை அறவே ஒதுக்குங்கள். 20.6.2026 முதல் 2.8.2026 வரை 8ஆம் வீட்டில் செவ்வாய் மறைவதால், குடும்பத்தில் கருத்து மோதல் வரும். பண விஷயத்தில் கவனம் தேவை.

இந்த வருடம் முழுவதும் சனிபகவான் 6ஆம் வீட்டில் நிற்பதால் அந்நிய நண்பர்களால் எதிர்பாராத ஆதாயம் உண்டாகும். விலையுயர்ந்த ஆடை, ஆபரணங்கள் சேரும். இழுபறியான அரசு வேலைகள் முடியும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். உங்கள் தலைமையில் நடக்கும்.

இல்லத்தரசிகளுக்குக் குடும்பத்தில் அங்கீகாரம் கிடைக்கும். கணவர் அன்பாக நடந்துகொள்வார். சின்னச் சின்ன பனிப்போர் வந்துபோகத்தான் செய்யும். கவலையை விடுங்கள். கன்னிப் பெண்களுக்கு தடைகள் உடைபடும். முடிவெடுப்பதில் அவசரம் வேண்டாம். பெற்றோரின் ஆலோசனையைக் கேளுங்கள். கல்யாணம் கூடி வரும். விரும்பிய மணமகன் அமைவார். மாணவ மாணவிகள் விளையாட்டைக் குறைத்து படிப்பில் கவனம் செலுத்தினால் அதிக மதிப்பெண் எடுக்கலாம். வகுப்பாசிரியரின் ஆதரவு உண்டு.

வியாபாரத்தில் வரவேண்டிய பாக்கிகள் எளிதில் வசூலாகும். ஜூன் மாதம் முதல் குரு 10இல் வருவதால் கண்டபடி கடன் வாங்கி வியாபாரத்தை விரிவுபடுத்திக் கொண்டிருக்கவேண்டாம். புது வாடிக்கையாளர்கள் தேடி வருவார்கள். சாதுர்யமான பேச்சால் இலாபமீட்டுவீர்கள். கலைத்துறையினருக்கு பெரிய நிறுவனங்களிடமிருந்து வாய்ப்புகள் தேடி வரும். அதேசமயம் ஒப்பந்தங்களில் கையெழுத்திடும்போது நன்கு படித்து பார்த்து கையெழுத்திடுவது நல்லது. எச்சரிக்கையாக இருப்பதாக நினைத்துக்கொண்டு, வரும் வாய்ப்பை தவற விட்டுவிடவேண்டாம். சிலருக்குப் பெரிய நடிகரின் படத்தில் நடிக்க வாய்ப்பு கிட்டும்.

மொத்தத்தில் இந்த ஆங்கிலப் புத்தாண்டு, திறம்பட செயற்பட்டு இலக்கை எட்டிப் பிடிக்க வைப்பதாக அமையும்.

**பரிகாரம்: விருத்தாசலத்திலிருந்து 24 கி.மீ தொலைவில் ஸ்ரீமுஷ்ணத்தில் உள்ள பூவராக சுவாமியை ஏதாவது ஒரு சனிக்கிழமையில் நெய் தீபமேற்றி வணங்குங்கள். நிம்மதி பெருகும். வாழ்வில் வசந்தம் வீசும்.**

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.9

நெடுந்தீவுப் பிரதேச செயலக திறன் அபிவிருத்தி அலகினால் 2026ஆம் ஆண்டுக்கான பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல், சிறுவர் பராமரிப்பு உத்தியோகத்தர், QSR குழு உறுப்பினர் ஆகிய இலவசப் பயிற்சிநெறி மற்றும் தொழில்வாய்ப்புக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆறு மாதங்களுக்கு முழுநேரக் கற்கையாக இந்தப் பயிற்சிநெறி நடத்தப்படும்.

பயிற்சிநெறியைக் கற்க ஆர்வமுள்ளவர்கள் பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உத்தியோகத்தரைத் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41-9)



வேலணைப் பிரதேச செயலகத்துக்குப் புதிய உதவிப் பிரதேச செயலாளராகத் திருமதி பாமா மோகன முரளி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்.மாவட்டச் செயலகத்தில் யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபனிடம் நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டார். (ச-66,9)

# யாழ். கடற்பரப்புகளில் கைதான இந்திய மீனவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம்,ஜன.9

நெடுந்தீவு மற்றும் காரைநகர் கடற்பரப்புகளில் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் 27ஆம், ஜனவரி 2ஆம், 3ஆம் திகதிகளில் கைதான மீனவர்களுக்கே இவ்வாறு விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது. (ச-27)

# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** இன்று எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். புதிய முயற்சிகளில் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து ஈடுபடவும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்.

**இடபம்:** எதிர்பாராத பணவரவு உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும். வாழ்க்கைத்துணையால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கடகம்:** முயற்சிகளில் வெற்றி உண்டாகும். சிலருக்கு உறவினர்கள்வகையில் எதிர்பாராத பொருள்சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை.

**சிம்மம்:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். கணவன் – மனைவி இருவரும் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. தாயின் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**கன்னி:** அதிகரிக்கும் செலவுகளால் மனதில் சஞ்சலம் ஏற்படும். குடும்பத்தில் மூன்றாவது நபர்களின் தலையீட்டை அனுமதிக்கவேண்டாம். தாய்மாமன்வழியில் சுபச்செய்தி வரும்.

**துலாம்:** இன்று நீங்கள் தொடங்கும் காரியங்கள் அனுகூலமாகமுடியும். சகோதரவகையில் மகிழ்ச்சியுடன் செலவும் உண்டாகும். உறவினர்கள்மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**விருச்சிகம்:** உற்சாகமான நாள். உறவினர்கள் வகையில் புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். சகோதரவகையில் ஆதாயம் ஏற்படும்.

**தனுசு:** உற்சாகத்துடன் செயற்படுவீர்கள். தேவையானபணம் இருந்தாலும் தேவையற்ற செலவுகளும் ஏற்படுவதால், சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**மகரம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வாக்கு வாதத்தில் ஈடுபடவேண்டாம். எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படும்.

**கும்பம்:** நண்பர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பின்னர் முடிந்துவிடும். சகோதரவகையில் எதிர்பாராத செலவு ஏற்படும்.

**மீனம்:** அனுகூலமான நாள். எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கும். புதிய முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# வெள்ளம் வருமுன் அணைக்கட்டுதல்

வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள புதிய காற்றழுத்தத் தாழ்வுமண்டலம், இலங்கையின் வானிலையில் மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. நாட்டின் வடக்கு -கிழக்கு மாகாணங்களை இலக்குவைத்து நகரும் இந்தத் தாழமுக்கமானது, வடக்கில் பலத்த மழையையும், பலமான காற்றையும் கொண்டுவரும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. முக்கியமாக யாழ்ப்பாணக் குடாநாடு அதிகளவான மழைவீழ்ச்சியையும், அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளையும் எதிர்கொள்ளநேரிடும் என்ற எதிர்வுகூறல்களும் வெளியாகியிருக்கின்றன. சென்ற ஆண்டின் இறுதிப்பகுதியில் நாட்டை உலுக்கியெடுத்த 'டித்வா' புயலின் கோரத்தாண்டவத்தை நாம் அவ்வளவு எளிதில் மறந்துவிடமுடியாது. நாட்டின் ஏனைய பகுதிகள் அந்தப் புயலால் சின்னாபின்னமான நிலையில், ஒப்பீட்டளவில் வடக்கு மாகாணம் பெரும் பாதிப்புகளிலிருந்து தப்பியிருந்தமை இயற்கை எமக்கு அளித்த ஒரு அதிர்ஷ்டம் என்றே கருதலாம். ஆனால், அந்த அதிர்ஷ்டம் எல்லாத் தருணங்களிலும் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கமுடியாது. டித்வா புயலின் தாக்கத்தால் ஏற்பட்ட அதிர்வுகளிலிருந்து நாடு முழுமையாக மீண்டு, மக்கள் ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கு முன்னரே, மீண்டும் ஒரு ஆபத்தான வானிலை மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதை எதிர்கொள்வதைத் தவிர எமக்கு வேறு வழிகள் இருக்கப்போவதில்லை.


கடந்த சில வாரங்களாகப் பெய்த கனமழையால் வடக்கின் பெரும்பாலான நீர்நிலைகள் நிரம்பிவழிகின்றன. குளங்கள், குட்டைகள் மற்றும் தாழ்நிலப் பகுதிகளில் நீர் தேங்கியுள்ளது. மிக முக்கியமாக, மண்ணின் நீர்க் கொள்ளளவு அதன் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இத்தகைய நிலையில் பெய்யும் சாதாரண மழைகூட வெள்ளத்தை ஏற்படுத்தும் அபாயத்தைக் கொண்டிருக்கும் போது, கனமழை பொழிந்தால் ஏற்படக்கூடிய விளைவுகள் மிகக் கடுமையானதாக இருக்கும் என்பது திண்ணம். நிலத்தால் உறிஞ்சப்படாத மழைநீர் அப்படியே குடியிருப்புகளுக்குள்ளும், விவசாய நிலங்களுக்குள்ளும் புகுந்து பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் அதிகமாகவே உள்ளன.

இந்த நேரத்தில் மக்கள் மத்தியில் நிலவும் ஒரு தவறான மனப்பாங்கைச் சுட்டிக்காட்டுவது அவசியமாகிறது. பல நேரங்களில் வானிலை முன்னறிவிப்புகள் பொய்த்துப் போகும்போது, அதை நகைச்சுவையாக எடுத்துக்கொள்வதையும், "புயலும் மழையும் வரும் என்று சொன்னார்கள், ஆனால் வெயில் அடிக்கிறது" என்று வளிமண்டலவியல் திணைக்களத்தின் எச்சரிக்கைகளை எள்ளிநகையாடுவதையும் நம்மில் பலர் வாடிக்கையாகக் கொண்டுள்ளனர். ஆனால், இயற்கை என்பது அறிவியலுக்கு அப்பாற்பட்ட பல மர்மங்களைக் கொண்டது. வானிலை ஆய்வு என்பது சாத்தியக்கூறுகளை மையப்படுத்திய ஒரு அறிவியல். தொண்ணூறு சதவீதம் ஆபத்து நிகழ வாய்ப்புள்ளது என்று எச்சரிக்கப்படும்போது, மிகுதி பத்து சதவீத அதிர்ஷ்டத்தை நம்பி நாம் அலட்சியமாக இருக்கமுடியாது. முன்னெச்சரிக்கையாக இருப்பதனால் நமக்கு எந்தவித நட்டமும் ஏற்படப்போவதில்லை. ஆனால் அலட்சியமாக இருந்து ஆபத்து நேரும்போது ஏற்படும் இழப்புகள் நம் வாழ்வாதாரத்தையே கேள்விக் குறியாக்கிவிடும் என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும்.

தாழ்நிலப் பிரதேசங்களில் வசிப்போரும், விவசாயிகளும் இந்த எச்சரிக்கையைத் தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும். வெள்ளம் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்ற மனநிலை ஆபத்தையே தரும். முன்னாயத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதே புத்திசாலித்தனமானது. விவசாயிகளும், வெள்ள இடரை எதிர்நோக்கும் பிரதேசங்களில் உள்ள மக்களும் இதை மனதில் இருத்திச் செயற்படவேண்டும். மழை ஒருபுறமிருக்க, கடும் காற்றும் வீசக்கூடும் என்ற எச்சரிக்கையையும் அனைவரும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். கடந்த காலங்களில் நாம் சந்தித்த வெள்ளப் பாதிப்புகளும், இழப்புகளும் நமக்குக் கற்றுத் தந்த பாடங்களை நினைவிற்கொள்வோம். ஆபத்து நெருங்கிய பின்னர் கூச்சலிடுவதைவிட, வருமுன் காப்பதே சிறந்தது. டித்வா புயல் எம்மைக் கடந்துசென்றது போல, இந்தத் தாழமுக்கமும் பெரிய பாதிப்பின்றி கடந்து செல்லலாம். அல்லது பெரும் சேதத்தை ஏற்படுத்தலாம். எது நடந்தாலும், அதனை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதே விவேகமானது.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com






## பொய்யாமொழி

**கோளில் பொறியின் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை**

**பொருள்:** உடல், கண், காது, மூக்கு, வாய் எனும் ஐம்பொறிகள் இருந்தும், அவைகள் இயங்காவிட்டால் என்ன நிலையோ அதே நிலைதான் ஈடற்ற ஆற்றலும் பண்பும் கொண்டவனை வணங்கி நடக்காதவனின் நிலையும் ஆகும்.




# தொற்றா நோய்களைத் தடுக்க விசேட பணிக்குழு நியமனம்



*சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

**கொழும்பு, ஜன.9**

**தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்த விசேட பணிக்குழுவை நியமிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

அரச மருத்துவமனைகளில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளிகளுக்குத் தரமான மற்றும் சுவையான உணவை வழங்கும் சிறப்புத் திட்டம் முதன்முறையாக மஹரகம தேசிய புற்றுநோய் மருத்துவமனையில் ஆரம்பமானது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரச மருத்துவமனை வரலாற்றில் முதன்முறையாக, சமையலறை என்பதற்குப் பதிலாக 'உணவு மற்றும் பானங்கள் பிரிவு' என்ற புதிய கட்டமைப்பை உருவாக்கியுள்ளோம். மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு உணவை மாத்திரம் வழங்காமல் தரமான, ஊட்டச்சத்து மிக்க மற்றும் சுவையான உணவை வழங்கத் தீர்மானித்துள்ளோம். சோறு மற்றும் கறிகள் அனைத்தையும் ஒன்றாகக் கலக்காமல், தனித்தனியாகப் பரிமாறக்கூடிய விசேட தட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். தொற்றாநோய்களைக் கட்டுப்படுத்த 'விசேட பணிக்குழுவை' நியமிப்பதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது -என்றார். (எ-இ)

## வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிப்பு

இலங்கையின் உத்தியோகபூர்வ மொத்த வெளிநாட்டுக்கையிருப்பு கடந்த 2025 டிசம்பர் மாத இறுதியில் 6,825 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இது 2025 நவம்பர் மாத இறுதியில் காணப்பட்ட 6,034 மில்லியன் டொலருடன் ஒப்பிடுகையில் 13.1 சதவீத வளர்ச்சியாகும்.

நாட்டின் பொருளாதார மீட்சி மற்றும் அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளதை இந்தத் தரவுகள் உறுதிப்படுத்துகின்றன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ச-இ)



## லிட்ரோ விலையில் மாற்றமில்லை

கொழும்பு, ஜன.9

2026 ஜனவரி மாதத்துக்கான லிட்ரோ எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் செய்யப்படாது என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது. உலக சந்தையில் எரிவாயுவின் விலையில் சற்றே அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும், நுகர்வோரின் நலன்கருதி விலையை அதிகரிக்காமல் இருக்கத் தீர்மானித்ததாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச)

## கார் மோதி சிறுவன் பலி!

கோர விபத்தில் 11 வயதுச் சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். இந்தத் துயரச் சம்பவம் குருநாகல் கல்கமுவைப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சிறுவன் சைக்கிளில் வீதியைக் கடக்க முயன்றபோது அதிவேகமாக வந்த கார் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது. காரின் சாரதியான 27 வயதான இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இணைய மோசடிகளைத் தடுக்கப் புதிய திட்டம்!

கொழும்பு, ஜன.9

இணையம் மற்றும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பணமோசடிகள் மற்றும் ஏமாற்று வேலைகளைத் தடுப்பதற்காக புதிய விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் துறை தெரிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டமானது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நேரடி வழிகாட்டலின்கீழ் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

நாளை

சனிக்கிழமை - மார்கழி 26

10.01.2026

சுபநேரம் : 03.33 - 05.03
ராகுகாலம் : 09.33 - 11.03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளின் 52 ஆம் ஆண்டு நினைவேந்தல் இன்றாகும். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது.






# 52 ஆண்டுகால ஆறாத வடு: உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் இரத்த சாட்சியங்கள்!

■ நந்தன்

காலம் எவ்வளவு வேகமாக ஓடினாலும், சில காயங்களின் வடுக்கள் மட்டும் என்றும் ஆறுவதில்லை. 1974 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி... யாழ். மண்ணின் வீதிகளில் தமிழ்மொழி மீதான பற்றும், அறிஞர்களின் உரைகளும் எதிரொலித்துக்கொண்டிருந்த வேளையில், எவரும் எதிர்பார்க்காத ஒரு மிலேச்சத்தனமான தாக்குதல் அரங்கேறியது. நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நிறைவு நாளில் சிந்தப்பட்ட அந்த அப்பாவித் தமிழர்களின் இரத்தம், 52 ஆண்டுகளைக் கடந்தும் ஈழத்தமிழர் வரலாற்றில் ஒரு தீராத நீதியாக நிலைத்து நிற்கிறது.

### அறிவின் சங்கமமும் அரசின் அச்சமும்

1974 ஜனவரி 2 ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு தொடங்கியபோது, அது ஒரு வெறும் ஆய்வு மாநாடாக மட்டும் இருக்கவில்லை. உலகெங்கிலும் இருந்து வந்திருந்த அறிஞர்களும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களும் யாழ். குடாநாட்டை ஒரு பண்பாட்டுத் தலைநகரமாக மாற்றியிருந்தனர். தமிழின் பெருமையை உலகம் கொண்டாடுவதைக் கண்டு அன்றைய சிறிலங்கா அரசு அச்சம் கொண்டது. மாநாட்டை முடக்கப் பல தடைகளைப் போட்டாலும் அதைத் தாண்டியும் மக்கள் எழுச்சி மாநாட்டை வெற்றிகரமாக நகர்த்தினர்.

### அந்தப் பயங்கரமான ஜனவரி 10

மாநாட்டின் இறுதி நாளான ஜனவரி 10 அன்று, சுமார் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளம் திரண்டிருந்தது. மாநாட்டு அறிஞர்களின் உரைகளைக் கேட்டுக்கொண்டிருந்த மக்கள் மீது, பொலிஸார் தடியடிப் பிரயோகத்தை நிகழ்த்தித் தாக்குதலைத் தொடங்கினர். கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன; மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினர். அமைதியாக நடந்த ஒரு அறிவுப்போர், பொலிஸாரின் மிலேச்சத்தனத்தால் இரத்தக் களரியானது.

துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் மக்கள் நிலைகுலைந்தனர். மின்சாரக் கம்பிகள் அறுந்து விழுந்ததில் இருவர் துடிதுடித்துப் பலியாக, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் மேலும் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மொத்தமாக 11 உயிர்கள் அந்த மண்ணில் தமிழ்மொழிக்காகப் பலியிடப்பட்டன.

### ஈடுசெய்ய முடியாத 11 தியாகங்கள்

இந்தக் கொடூரத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்கள் வெறும் பெயர்கள் அல்ல; அவர்கள் தமிழினத்தின் இரத்த சாட்சியங்கள்:


| | | |
|---|---|---|
| சின்னத்தம்பி நந்தகுமார் | - (வயது 14) | - சுழிபுரம் மேற்கு |
| வேலுப்பிள்ளை கேசவராசன் | - ( வயது 15) | - தொல்புரம் மேற்கு |
| இராசதுரை சிவானந்தம் | - (வயது 21) | - காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் |
| பரம்சோதி சரவணபவன் | - (வயது 26) | - புலோலி கிழக்கு |
| இராசன் தேவரத்தினம் | - (வயது 27) | - யாழ்.நாவலர் வீதி, யாழ்ப்பாணம் |
| வைத்தியநாதன் யோகநாதன் | - (வயது 33) | - தெல்லிப்பழை |
| ஆறுமுகம் தில்லைநாயகம் | - (வயது 37) | - புளியங்கூடல், ஊர்காவற்றுறை |
| பிலேந்திரன் அருளப்பு | - (வயது 52) | - .2ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் |
| யோன்.பிடலிகர் சிக்மலிங்கம் | - (வயது 53) | - பாங்சால் வீதி, யாழ்ப்பாண்ம் |
| சிதம்பரி ஆறுமுகம் | - (வயது 55) | - நாயன்மார்கட்டு |
| சின்னத்துரை பொன்னுத்துரை | | - கோப்பாய் |

இவர்களில் 14, 15 வயதுச் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை அடங்குவர் என்பதுதான் காலத்தின் பெரும் சோகம்.

### முற்றுப்பெறாத நீதி

இந்த மிலேச்சத்தனமான செயலை உலக நாடுகள் அன்று வன்மையாகக் கண்டித்தன. மாநாடு நடந்த வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக, யாழ். முற்றவெளியில் எழுப்பப்பட்டுள்ள நினைவுத்தூபி இன்றும் அந்த 52 ஆண்டுகால வரலாற்றுத் துயரை வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறது. "தானும் செய்ய மாட்டான், மற்றவர்களையும் செய்ய விடமாட்டான்" என்ற அதிகார வர்க்கத்தின் வன்மத்திற்குப் பலியான அந்த 11 ஆத்மாக்களின் தியாகம், தமிழர்களின் உரிப் போராட்ட வரலாற்றில் ஒரு முக்கியத் திருப்புமுனையாக இன்றும் நினைவுகூரப்படுகிறது.

அவர்கள் தமிழ் மொழிக்காகச் சிந்திய இரத்தம், அடுத்த தலைமுறைக்கும் மொழியின் மீதான பிடிப்பை ஊட்டிக்கொண்டே இருக்கும்.



# போதகர் சாம் இராஜசூரியர்:

## இறைவனுக்கும் மக்களுக்குமாக வாழ்ந்தவர்

யாழ்ப்பாணம், மானிப்பாய் மண்ணில் உதித்து, நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக இறைபணியையும் மக்கள் பணியையும் இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்த ஒரு மாபெரும் ஆளுமை அமைதி கொண்டுவிட்டது. 86 ஆண்டுகால நீண்ட பயணத்தில், போதகர் சாம் இராஜசூரியர் விட்டுச் சென்ற சுவடுகள் வெறும் நினைவுகள் அல்ல; அவை பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்வில் ஏற்றப்பட்ட ஒளிவிளக்குகள்.

### இறைபணியும் சமூகப் பணியும்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும், பின்னர் மானிப்பாய் இந்துக்கல்லூரியிலும் பெற்ற கல்வியின் பேறாக சாம் இராஜசூரியர் ஒரு கட்டட வரைபடக் கலைஞராக கால் பதித்தார். காலப்போக்கில் அவர் மனித மனங்களைச் செதுக்கும் மகா கலைஞனாக மாறினார். "ஆண்டவரின் பணி என்பது ஆலயச் சுவர்களுக்குள் மட்டும் அடங்கியதல்ல; அது எளிய மக்களின் கண்ணீரைத் துடைப்பதிலும் இருக்கிறது" என்பதை அவர் தனது செயல்களால் நிரூபித்தார். 45 வருட கால இறை ஊழியத்தில், மது மற்றும் போதைப் பழக்கங்களுக்கு அடிமையாகிக் கிடந்த எத்தனையோ இளைஞர்களை மீட்டு, அவர்களை நற்பிரஜைகளாக மாற்றிய பெருமை இவருக்கு உண்டு.

### அனர்த்த காலத்து ஆபத்பாந்தவன்

1996 ஆம் ஆண்டு 'கியூமெடிக்கா' (Humidica) என்ற சமூகசேவை நிறுவனத்தை ஆரம்பித்து அவர் ஆற்றிய பணிகள் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டியவை. 2004ஆம் ஆண்டு சுனாமிப் பேரலைகள் இலங்கை மக்களின் வாழ்க்கையைச் சிதைத்தபோது, வெறும் ஆறுதல்கள் சொல்லாமல், பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு 1100 படகுகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை மீண்டும் தழைக்கச் செய்தார். ஆயிரம் புதிய வீடுகளையும், நவீன மருத்துவமனைகளையும் நிர்மாணித்து மக்கள் வசம் ஒப்படைத்தபோது, அவர் ஒரு சமயத் தலைவராக மட்டுமன்றி, சமூகத்தின் பாதுகாவலராகவும் தென்பட்டார்.

### கல்வியில் ஒரு புரட்சியாளர்

வட மாகாணத்தில் சர்வதேசக் கல்வி என்பது எட்டாக்கனியாக இருந்த 2006ஆம் ஆண்டு கால பகுதியில், மானிப்பாயில் 'ஏஞ்சல் சர்வதேச பாடசாலையை' நிறுவி ஒரு புதிய கல்விப் புரட்சிக்கு வித்திட்டார். பின்னாளில் யாழ்ப்பாணம் மற்றும் சாவகச்சேரி வரை இந்தக்கல்விச் சேவை விரிவடைந்தமை, அவரது தீர்க்கதரிசனத்திற்குச் சான்றாகும். ஏழை மாணவர்களுக்காக அவர் ஆரம்பித்த பராமரிப்பு இல்லங்களும், நெடுந்தீவு மக்களின் துயரம் துடைக்க அவர் தொடங்கிய 'கியூமெடிக்கா' இலவச படகுச் சேவையும் இன்றும் அவரது பெயரைக் கூறிக்கொண்டிருக்கின்றன.

### தலைமைத்துவமும் தகைமைகளும்

யாழ். கிறிஸ்தவ சபைகளின் ஐக்கியத்தின் தலைவராகவும், வட பிராந்திய பெந்தெக்கோஸ்தே சபையின் நீண்டகாலக் குரு முதல்வராகவும் அவர் ஆற்றிய பணிகள் ஈடு இணையற்றவை. வட பிராந்திய வேதாகமக் கல்லூரியின் அதிபராகப் பல புதிய போதகர்களை உருவாக்கிய அவர், ஆன்மீகத் தலைமைத்துவத்திற்கு ஒரு புதிய இலக்கணத்தையே கற்பித்தார்.

தான் வாழ்ந்த சமூகத்திற்காகத் தன்னையே உருக்கி ஒளியூட்டிய மெழுகுதிரியான அவர் 04.01.2026 அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தாலும், அவர் கட்டிய வீடுகளிலும், அவர் உருவாக்கிய பாடசாலைகளிலும், அவர் மீட்டுத்தந்த வாழ்வாதாரங்களிலும் போதகர் சாம் இராஜசூரியர் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாதம் 24, 25ஆம் திகதிகளில் யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடு




யாழ்ப்பாணம்,ஜன.9

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை, இந்தியாவின் ‘சுரானா அன்ட் சுரானா’ சட்ட நிறுவனத்துடன் இணைந்து 2026ஆம் ஆண்டின் யாழ்ப்பாண சர்வதேச சட்டமாநாடு மருத்துவபீடத்தின் ஹூவர் கலையரங்கில் இம்மாதம் 24ஆம் மற்றும் 25ஆம் திகதிகளில் காலை 9 மணி முதல் மாலைவரை இடம்பெறவுள்ளது.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சட்டத்துறை ‘சுரானா மற்றும் சுரானா’ சட்ட நிறுவனத்துடன் 2024ஆம் ஆண்டில் முதல்முதலாக கரம்கோர்த்து முதலாம் யாழ்ப்பாண சட்டமாநாட்டை ஒழுங்கு செய்தது. 2025ஆம் ஆண்டில் சர்வதேச சட்ட நிபுணர்களை இணைத்து அதனை யாழ்ப்பாண சர்வதேச சட்ட மாநாடாக பரிணாமிப்பதில் வெற்றி கண்டது. தொடர்ந்து இவ்வாண்டு மூன்றாவது முறையாக இந்தச் சர்வதேச சட்ட மாநாட்டை நடத்த ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது.’ ஆய்வு, மறுவடிவமைப்பு. மீள்நிர்மாணம்’ எனும் தொனிப்பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இவ்வருட மாநாட்டில் இலங்கை உயர்நீதிமன்ற நீதிபதிகள் உள்ளடங்கலாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்கள் பலர் கலந்துகொண்டு மாநாட்டின் தொனிப்பொருள் சார்ந்த தான பல்வேறு விடயப்பரப்புகள் தொடர்பில் உரையாடவுள்ளனர்.

மாநாட்டின் முதல் நாளன்று பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி சிதம்பரம்பிள்ளை துரைராஜா, கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்றத்தலைவர் நீதிபதி ரோகத்த அபேசூரிய, சிறப்பு விருந்தினராக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேலதிக செயலாளருமான சரண்யா ஹசந்தி உருகொடவத்தே திஸாநாயகவும் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

அன்றைய தினத்தின் பிரதம உரையாளர்களாக இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையத்தின் நிர்வாக இயக்குநரான கலாநிதி மரியோ கோமெஸிம், பாரிஸ்டர் ஸாரா மண்டி வல்லா அக்பரால்டும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

முதல்நாள் நிகழ்வின் மற்றுமொரு பிரதான அம்சமாக ‘சட்டத்தின் எதிர்காலம் ஆட்சி நிர்வாகம், தொழிநுட்பம், சமூகம் மற்றும் உலக பொருளாதாரம்’ எனும் தொனிப்பொருளின் கீழான குழுக் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து யாழ்.மண்ணின் பண்பாட்டுச்சுவடுகளைப் பிரதிபலிக்கும் பண்பாட்டு நிகழ்வொன்றும் அன்றைய நாளில் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. இந்த நிகழ்வு மாலை 6 மணி முதல் 9 மணி வரை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

மாநாட்டின் இரண்டாம் நாளன்று பிரதம விருந்தினராக உயர்நீதிமன்ற நீதிபதி யசந்த கோதாகொடவும், கௌரவ விருந்தினராக மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி கலாநிதி, பிராங்க் குணவர்த்தனவும், சிறப்பு விருந்தினராக அரசாங்கத் துணைத் தலைமை வழக்குரைஞர் ஹரிப்ரியா ஜயசுந்தரவும் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

மேலும் அன்றைய நாளின் சிறப்புரைகளை ஜனாதிபதி சட்டத்தரணி விவேகானந்தன் புவிதரனும் பேராசிரியர் சாந்தி செகராஜசிங்கமும் வழங்கவுள்ளனர்.

இரண்டாம் நாளின் மற்றொரு பிரதான நிகழ்வாக ஆட்சி நிர்வாகமும் சட்டவாட்சியும், சட்டமும் தொழில்நுட்பமும், சமூக மற்றும் பண்பாட்டுப் பரிமாணங்கள், சூழலும் காலநிலை மாற்றமும், வணிகமும் எண்ணியல் பொருளாதாரமும் எனும் தலைப்புகளின் கீழ் ஆய்வாளர்கள். தங்களின் ஆய்வுக்கட்டுரைச் சுருக்கங்களை முன்வைக்கவுள்ளனர்.

மாநாட்டின் ஓரங்கமாக ‘செயற்றிட்டங்களிலிருந்து பங்காளித்துவத்திற்கு தூண்டுகோலாக மக்கள் பங்கேற்பு’ எனும் தொனிப்பொருளின்கீழான மாநாட்டு முன் சிறப்பு அமர்வு ஒன்றும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3மணி முதல் 6 மணி வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இதில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் பிரதேச செயலாளர் இ.விஜயகுமார், பொறியியலாளர் அ. றொபர்ட் பீரிஸ், யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி அகிலன் கதிர்காமர் மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக ஆர்வலர் வைதேகி நரேந்திரன் ஆகியோர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றி பயன்பெற்றுக்கொள்ளுமாறு மாநாட்டு ஒழுங்கமைப்புக்குழுவினர் கோரியுள்ளனர். (ச-20)

## நல்லூர் றோட்டறிக் கழகத்தால் நாயாறு மக்களுக்கு நிவாரணம்



முல்லைத்தீவு,ஜன.9

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு செம்மலை கிழக்கு(நாயாறு) கிராம அலுவலர் பிரிவில் வசிக்கும் 113 குடும்பங்களுக்கு, நல்லூர் றோட்டறிக் கழகத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

செம்மலைக் கிழக்கு கிராம அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்கம், பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் சக்தி விளையாட்டுக்கழ கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

அனுசரணையாளர் த.ரமேஷ், ஆலயப் பங்குத் தந்தை அருட்திரு.எமில் போல், நல்லூர் றோட்டறிக் கழகத்தின் தலைவர் அ.டிக்சன் மற்றும் முன்னாள் தலைவர்கள், அங்கத்தவர்கள் இணைந்து பொதிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினர். (க)

யாழ்.சைவப்பிரகாசப் பேரவையின் ஏற்பாட்டில் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு திருவண்ணாமலையில் அமைந்துள்ள அருணகிரிநாதர் திருமடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச-41-66)



# வெனிசுலா ஜனாதிபதி கைது வளச் சுரண்டலுக்கான உத்தியே

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம், ஜன.9

இறையாண்மையும், சுதந்திரமும், சுயாதிபத்தியமும் கொண்ட தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி அமெரிக்காவில் கைதுசெய்யப்பட்டுள்ளமை அப்பட்டமான பயங்கரவாதம் என்று கண்டித்துள்ளது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி.

அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வெனிசுலா எண்ணெய் வளத்தில் முதன்மை இடத்திலிருக்கின்றது. நாட்டின் எண்ணெய் வளமும், ஏனைய வளங்களும் நாட்டு மக்களுக்குரியதே அன்றி அந்நியரின் சுரண்டலுக்கும், கொள்ளை இலாபத்துக்கும் உரியவை அல்ல என்பதே சிறைபிடிக்கப்பட்ட ஜனாதிபதி மதுரோவினதும், அவருக்கு முந்திய ஜனாதிபதி சாவோசியினதும் உறுதியான நிலைப்பாடாக இருந்தது.

உலக நாடுகளின் வளங்களைச் சுரண்டிக் கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தாலும், அவர்களது முதலாளித்துவப் பகாசுரக் கம்பனிகளாலும் பொறுத்துக்கொள்ளமுடியவில்லை. அதனாலேயே வெனிசுலா ஜனாதிபதியும், அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொடூரச்செயலை அமெரிக்க மக்கள் உள்ளிட்ட உலக மக்களோடு இணைந்து எமது கட்சியும், இலங்கை மக்களும் வன்மையாகக் கண்டிக்கின்றனர் என்றுள்ளது. (எ-66)

# கேள்விக்குறிகளாக சர்வதேசச் சட்டங்கள்

## ஸ்ரீநேசன் எம்.பி. கவலை

மட்டக்களப்பு, ஜன.9

உலகில் ஜனநாயகமும், இறைமையும் கேள்விக் குறிகளாக மாறியுள்ளன என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மவாட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா. ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெனிசுலா ஜனாதிபதி நிக்கலஸ் மதுராவையும், அவரது மனைவியையும் வல்லரசு நாடான அமெரிக்க ஜனாதிபதியின் படைகள் வான்தாக்குதலை மேற்கொண்டு கைதுசெய்து அமெரிக்காவுக்குக் கொண்டு சென்றுள்ளனர். இங்கு சர்வதேச சட்டம், நாட்டின் இறைமை என்பதெல்லாம் கேள்விக்கு உள்ளாகியுள்ளன.

‘வல்லவன் வாழ்ந்தான் வலுவிழந்தவன் வீழ்ந்தான்’ என்ற வலுவான வாக்குப் பலிதமாகியுள்ளது.

சர்வதேச சட்டங்கள் அமெரிக்காவுக்கு விதிவிலக்காகியுள்ளன. இந்த நிலைமை எமது உள்நாட்டிலும் காணப்படுகிறது. இது நியாயமற்றதாக இருந்தாலும், யதார்த்தமாகியுள்ளது- என்றார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15 . 06 . 1932

மறைவு
14 . 01 . 2023

## அமரர் தியாகராசா சிவயோகம்

ஆண்டுகள் மூன்று ஆனதம்மா

அம்மா என்று அழைக்க யாரும் இல்லையே

உன்னை போல் அழகான சொந்தம் இல்லையே

உனக்கு நிகரான சொந்தம் எதுவுமில்லையே

உனக்கு நிகரான பந்தமும் எதுவுமில்லையே

இருப்பதை ஏற்கும் இயல்பு உடைய நீங்கள் எங்கு சென்றீர்கள்

உங்கள் நினைவு எம்மை வாட்டுதம்மா

நீங்காத நினைவில் வாழ்கின்றோம் அம்மா....!

3ம் கட்டை,
ஆனைக்கோட்டை

(CS/31218) J-1

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

# நன்றி நவிலும், அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



**அன்புடையீர்! கடந்த 26.12.2025 வெள்ளிக்கிழமை அன்று, முருகனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவி**

## திருமதி சிவயோகம்மா பரமலிங்கம் (யோகம் டீச்சர்)

அவர்களது மறைவுச் செய்திகேட்டு, பல வழிகளிலும் துயர் பகிரிந்து, ஆறுதல்கூறி, உதவியளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அன்பு உறவுகள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியை இன்று 09.01.2026 வெள்ளிக்கிழமை காலை 7.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் வீட்டுக்கிரியை (சபிண்டீகரணம்) அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. மேற்படி ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து பிராத்திப்பதோடு, அன்று மதியம் 12.30 மணியவில் இலங்கை வேந்தன் கல்லூரி (63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்) மண்டபத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். நன்றி

(CS 76857) ER

206/3 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்கனம்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு
17 . 12 . 1936

உதிர்வு
08 . 01 . 2026

## அமரர் திருமதி. செல்லையா சரஸ்வதி

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சரஸ்வதி அவர்கள் நேற்று (08.01.2026) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - நாகம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற முருகேசு செல்லையா அவர்களின் அன்பு மனைவியும், அமரர்கள் பொன்னம்பலம் தங்கம்மா, சி.அழகரத்தினம், சி.முருகையா, சி.கணேசமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிரிசாம்பாள், சாந்தினி (ஆசிரியர், யா/மகாஜகன் கல்லூரி), அமரர் சிவகுமார் (சந்தோஷம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுந்தரலிங்கம், உதயகுமார் ஆகியோரின் மாமியாரும், குணதீபன் - வித்தியா, நகுலேஸ்வரன் - கார்த்திகா, ஸ்ரீகரன் - லோகிதா, கம்ஷாயினி, சோபிதரன் ஆகியோரின் பேர்த்தியும், அக்ஷயா, நிஷானி, ஆதித்தன், ஆரூஷா, லக்ஸ்மிகன், யாதவி ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2026) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டு கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



தோற்றம்
14 . 04 . 1973

மறைவு
27 . 12 . 2025

## ரமேஷ் சிறிதரன்

(BSc Computer Science (Carleton University).
சாவகச்சேரி மகளிர் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,
இந்துக் கல்லூரி கொழும்பு)

தபாற்கந்தோர் வீதி சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், கனடா மார்க்கத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ரமேஷ் சிறிதரன் அவர்கள் கடந்த 27.12.2025 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் சிறிதரன் (JST Sri) ஜெயராணி தம்பதிகளின் மூத்த மகனும், முத்துக்குமாரு - தங்கம்மா மற்றும் இராமலிங்கம் -பராசக்தி தம்பதிகளின் அன்புப் பேரனும், சுதந்தி (ஓமான்), சுதர்சினி (தர்சி) (லண்டன்), புவிசுதேஷ் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சிவகுமார் (ஓமான்), நிரஞ்சன் (லண்டன்), கீர்த்தனா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

கிரியை : Monday, 11 Jan 2026 9:00 AM - 11:00 AM
Chapel Ridge Funeral Home 8911 Woodbine Avenue Markham, ON L3R 5G1
தகனம் : Monday, 11 Jan 2026 11:00 AM
North Toronto Crematorium, 2 Stalwart Industrial Drive, Gormley, ON

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
0094777222461, 0096896245056

(CS 31220) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதார வளர்ச்சியை தக்கவைக்க நடவடிக்கை!

## மத்திய வங்கியின் ஆளுநர் உறுதி

கொழும்பு, ஜன. 9

நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் தக்க வைப்பதற்கு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்கள் மற்றும் அழிவுகள் காரணமாக, இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பாதிக்கப்படும் என்று சர்வதச நாணய நிதியம் எச்சரிக்கை விடுத்துள்ளது. உட்கட்டமைப்புச் சேதங்கள் காரணமாக, ஏற்கனவே அவதானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியை தொடர்ச்சியாகக் கொண்டு செல்வதில் சிரமங்கள் உள்ளன என்றும் நாணய நிதியம் கூறியிருந்தது.

இவ்வாறான நிலையிலேயே, 'பொருளாதார வளர்ச்சி தக்கவைக்கப்படும்' என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க கூறியுள்ளார்.

கடந்த இரண்டு வருடங்களாக அவதானிக்கப்பட்ட பொருளாதார வளர்ச்சியை தொடர்ச்சியாகத் தக்கவைப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இவ்வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டும். குறிப்பாக தேசியப் பொருளாதாரம் 5 வீதம் வரை வளர்ச்சியடைவது உறுதி என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மேலும் கூறியுள்ளார். (ம)


## பெண் உதவியாளர் தேவை

கோண்டாவில் சிகிச்சை நிலையத்திற்கு

பெண் உதவியாளர் தேவை.

தொடர்புகளுக்கு:-

075 906 0783

(CS/60411) J-1


## மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 11 . 1959



மறைவு 07 . 01 . 2026

### பொன்னம்பலம் சின்னத்துரை

இளவாலை வடக்கு, இளவாலையை பிறப்பிடமாகவும் விபுலானந்தர் வீதி மாதகலை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சின்னத்துரை 07.01.2026 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - இளையபிள்ளை தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான இராமசாமி - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், பஞ்சாட்சரதேவியின் அன்புக் கணவரும், கஸ்தூரி (ஆசிரியை, மு/உடையார்கட்டு ம.வி), கௌரிசங்கர், பவித்திரன், அபிராமி (மாணவி, Radiography, KDU) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிரோஜன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் மாமனாரும், ராம்வர்ஷஜன், திவ்யவர்ஷினி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, இராஜி, இராசேந்திரம், நகுலேஸ்வரி, சிறிகரன், ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான நாகராசா, Dr.விக்கினேஸ்வரராஜா, ஸ்ரீஸ்கந்தராசா, கந்தசாமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2026) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்

தகவல்: குடும்பத்தினர்
077 538 4992

(CS 60408) E

## 2ம் ஆண்டு நினைவுதினம்



தோற்றம் 23.05.1938 மறைவு 02.01.2024

### தம்பிஐயா கதிரவேற்பிள்ளை (சுந்தரம்)

ஏணியாக நின்று எம்மை ஏற்றிவிட்டவரே
தோணியாக நின்று துறைமுகம் காட்டியவரே
வாழ்வதற்கு இலக்கணமாய்
வாழ்ந்து காட்டிய தெய்வமே
இன்னும் சில காலம் எம்மோடு வாழ மறந்ததேன்?
இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டன


செல்லையா வீதி,
அல்லாரை வடக்கு,
கொடிகாமம்.

குடும்பத்தினர்

(CR/46854) J-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 10 . 1961



மறைவு 07 . 01 . 2026

### பாக்கியநாதர் ஜெயவதனி (ஜெயா)

உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் உயரப்புலம் ஆனைக்கோட்டை, சுவிஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.பாக்கியநாதர் ஜெயவதனி அவர்கள் 07.01.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை - ஆரோக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற எலியாஸ் - இசபெல் தம்பதிகளின் மருமகளும், எலியாஸ் பாக்கியநாதர் அவர்களின் பாசமிகு துணைவியும், வில்சன் (லண்டன்) ஸ்ரெனிஸ்ரன் (ஜேர்மனி), லக்டன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மேரி றொசிற்றா (லண்டன்), ஜெருஷா (ஜேர்மனி) ஜெனிபர் (சுவிஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும், அன்றியன் (லண்டன்), ஆகவி (லண்டன்), றியானா (ஜேர்மனி) றொசானா (சுவிஸ் ) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஜேசுராஜா (கனடா), புஸ்பநாதன் (சுவிஸ்), சாந்தகுமார் (சுவிஸ்), சுவன்ரினி, (கனடா), அமலதாஸ் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லெற்றிசியா, ஜெயராணி, றமோனாவாணி, விக்ரர் குமார், றாஜினி, காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ், அல்பிரட், மற்றும் திரேசாமலர், ஆரோக்கியமலர் (கனடா), அருளானந்தம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 12.01.2026 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காக்கைதீவு அடைக்கலநாயகி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

+94 78673 3024 - கணவர்
+94 76 212 6595 - கணவர்
+447533095699 - வில்சன் (மகன்)
+41763750704 - ஸ்ரெனிஸ்ரன் (மகன்)
+41788292924 - [illegible] (மகன்)

(CR 46853) E

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 . 03 . 1934



மறைவு 21 . 12 . 2024

### அமரர் கந்தையா நல்லம்மா

திதி : சஷ்டி (09.01.2026)

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே
எம் நல்வாழ்வுக்கு ஒளியூட்டிய வட்ட நிலவே
ஏணியாக நின்று எம்மை ஏற்றிவிட்டவரே
வாழ்வுக்கு இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய - அம்மா
இன்னும் சிலகாலம் எங்களோடு வாழமறந்ததேன் அம்மா
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் வாழ்ந்த
எங்கள் அன்புத் தெய்வம் எந்த பிறவியிலும்
நீங்கள்தான் எங்களுக்கு அன்புத் தெய்வமாக
வரவேண்டுமென மனம் ஏங்கி நிற்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

அல்லாலை வீதி, மீசாலை
[illegible] 1367


உங்கள் நினைவுகளுடன் என்றும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CR/46842)J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் 20 பயனாளிகளுக்கு தையல் தொழில் மேற்கொள்வதற்கான தையல் இயந்திரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி, வரணி பிரிவுகளுக்குட்பட்ட பயனாளிகளுக்கு அவை கையளிக்கப்பட்டன. (ச-41-9)





ஊர்காவற்றுறைப் பிரதேசசபையால் நெருஞ்சிமுனைக் குளக்கட்டில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன. சபையின் 2026ஆம் ஆண்டின் முதல் நாளில் பசுமைப்புரட்சியை ஏற்படுத்தும் முகமாக யாழ்.கமநல சேவைகள் திணைக்களத்தினால் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ச-41-9)

மந்துவில் வள்ளுவர் முன்பள்ளிச் சிறார்களின் கலைவிழாவும் பாடசாலையில் இணையவுள்ள சிறார்களை வழியனுப்பும் நிகழ்வும் மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. முன்பள்ளி முகாமைத்துவக்குழுத் தலைவர் மா.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய விலைமதிப்பீட்டுத் திணைக்கள மதிப்பீட்டாளர் திருமதி அற்புதராணி இரத்தினராசா கலந்துகொண்டார். (41-9)





## புதிய அதிபருக்கு வரவேற்பு

மன்னார், ஜன.9

மன்னார் பேசாலை பற்றிமா மத்திய மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக நியமிக்கப்பட்ட யூட் ஜோசப் ஆனந்தம் குரூஸ் கடந்த திங்கட்கிழமை தனது கடமையைப் பொறுப்பேற்றார்.

இதன்போது பாண்ட் இசைவாத்தியத்துடன் புதிய அதிபரை பாடசாலையின் மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பேசாலை மக்கள் ஆகியோர் இணைந்து வரவேற்றனர். (41-56)

கொடிகாமம் வங்கி வலயத்துக்குட்பட்ட 3 பயனாளிகளுக்குக் கடற்றொழில் மேற்கொள்வதற்கான வலைகள் பிரதேச செயலாளர் எவ்.சீ.சத்தியசோதியினால் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி அலகின் ஏற்பாட்டில் இவை வழங்கப்பட்டன (ச-41-9)



## சந்நிதி ஆச்சிரமத்தால் 15 பேருக்கு உலருணவு

யாழ்ப்பாணம்,ஜன.9

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் பளைப் பிரதேச சபையின் 15 தூய்மைப் பணியாளர்களுக்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்கள் கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டன.

பளைப் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள், பளைப் பிரதேசசபையின் தவிசாளர் சு.சுரேன், செயலாளர் ந.மோகனரூபன், உபதவிசாளர் சி.செல்வராஜா, சமூக மருத்துவ உத்தியோகத்தர் திருமதி மிரேஸ் திவேகா, பளைப் பிரதேசசபையின் உறுப்பினர்கள் மற்றும் சந்நிதியான் ஆச்சிரமத் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-66)





**நயினாதீவு**

**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் வழிபடுநர் பேரவையின் விசேட பொதுக்கூட்டம்**

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வழிபடுநர் சபையின் விசேட பொதுச்சபைக் கூட்டம் 11.01.2026இல் நடாத்த திட்டமிடப்பட்டிருந்தது.

மேற்படி பொதுச்சபைக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினாலும் எமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணிகளாலும் திட்டமிட்டபடி 11.01.2026இல் நடாத்த முடியாத சூழ்நிலையொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக கூட்டம் தவிர்க்க முடியாத காரணிகளால் பிற்போடப்பட்டுள்ளது.

குறித்த காரணகாரியங்கள் தொடர்பான விளக்கம் பின்னர் அறியத்தரப்படும். கூட்டம் தொடர்பான திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

**மதியாபரணம் அம்பிகைபாகன்**
**கௌரவ செயலாளர்**

**அறங்காவலர் சபை**
**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்**
**நயினாதீவு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டியில்...

கண்டி மாவட்டத்தின் உடதும்பர பகுதியிலுள்ள தேவஹந்தியா கிராமத்திலேயே இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் சேதங்கள் ஏற்பட வாய்ப்பில்லை எனவும், பொது மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்றும் புவியியல் ஆய்வு மையம் மேலும் கூறியுள்ளது. (அ-ம)

## இடரை...

அவர் மேலும் தெரிவித்தாவது:-
வங்காள விரிகுடாவின் தென்கிழக்கு பகுதியில் ஏற்பட்ட தாழமுக்கம் காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரற்ற காலநிலை நிலவி வருகின்றது. இது ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வுநிலையாக வருவதற்கு வாய்ப்புகள் அதிகம் உள்ளன.
இதனால், கடற்பகுதிகள் கொந்தளிப்பாகக் காணப்படும். அத்துடன், காற்றின் வேகமும் அதியுயர்வாக இருக்கும். கடல் அலைகள் 3.5 மீற்றர்வரை உயர்வதற்குச் சாத்தியங்கள் உள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தீவகத்துக்கான கடற்போக்குவரத்து மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது. மீனவர்கள் கடற்றொழில் நடவடிக்கையில் இருந்து விலகி இருக்குமாறும் கோரப்பட்டுள்ளது. காற்றமுத்தம் காரணமாக, எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் 100 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகச் சாத்தியங்கள் உள்ளன. எனினும், மக்கள் அச்சமடைய வேண்டிய அவசியம் இல்லை.
வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்புகளை உரிய அதிகாரிகளுக்கு உடனுக்குடன் வழங்கி வருகின்றோம். கூட்டு நடவடிக்கைகள் சிறப்பான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன - என்றார். (அ-ம-26)

## இடர்நிலையை...

ளது. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் தலைமையில் விசேட முன்னாயத்தக் கூட்டமொன்று நேற்று இடம்பெற்றது. இதன்போதே, வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள காற்றமுத்தத் தாழ்வு நிலையை எதிர்கொள்வது தொடர்பில் அனைத்துப் பிரதேச செயலர்களுக்கும் உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.
வெள்ள இடர் ஏற்பட்டால் மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பிலும், இடைத்தங்கல் முகாம்களைத் தயார்ப்படுத்துவது தொடர்பிலும், சமைத்த உணவுகளை வழங்குவது தொடர்பிலும் கூடுதலான அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. (அ-ம-26)

## பிரதமர்...

அதிருப்தி காரணமாக, பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு எதிர்க்கட்சிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இது தொடர்பான ஆவணங்களில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்தும், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றுமுன்தினம் ஒப்பமிட்டிருந்தனர்.
இவ்வாறான நிலையிலேயே, பிரதமர் ஹரிணிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்படும் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். 'எதிர்க்கட்சிகளின் சதியைத் தோற்கடித்து, பிரதமரைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்' என்றும் அவர் கூறியுள்ளார்.
அனைத்து எதிர்க்கட்சிகளும் வங்குரோத்து அடைந்துள்ளன. ஆதலால் தான் அவை பிரதமர் ஹரிணிக்கு எதிராகநம்பிக்கையில்லாத்தீர்மானத்தைக் கொண்டுவந்து, தமது இருப்பை உறுதிப்படுத்த எத்தனிக்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்று பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## கச்சதீவுப்...

செயலகத்தில் நேற்று நடைபெற்றது.
இந்தக் கலந்துரையாடலில் இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை, அவர்களுக்கான தங்குமிட வசதிகள், கூடாரங்கள், உணவு வசதிகள், பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், மலசல கூட வசதிகள், குடிதண்ணீர் தேவைகள், பாதுகாப்பு, ஒலி ஒளி வசதிகள், கடல் மற்றும் தரைப் போக்குவரத்து ஒழுங்குகள், தனியார் கடற்போக்குவரத்து படகுகளின் கட்டண நிர்ணயம், கழிவு முகாமைத்துவம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
அத்துடன், இந்தக் கூட்டத்தில் பின்வரும் விடயங்கள் பிரதானமாகக் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. இலங்கையைச் சேர்ந்த 4 ஆயிரம் யாத்திரிகர்களும் இந்தியாவைச் சேர்ந்த 4 ஆயிரம் யாத்திரிகர்களும் என 8 ஆயிரம் யாத்திரிகர்கள் கலந்து கொள்வார்கள்.
2. குறிகாட்டுவானிலிருந்து கச்சதீவுக்கு படகுச் சேவைக்கான ஒரு வழிக் கட்டணமாக ஆயிரத்து 200 ரூபாவை அறவிடுதல். நெடுந்தீவிலிருந்து கச்சதீவுக்கான ஒரு வழிக்கட்டணமாக ஆயிரம் ரூபாவை அறவிடுதல். அத்துடன், குறிகாட்டுவானிலிருந்து 46 தனியார் படகுகளைச் சேவையில் ஈடுபடுத்துதல்
3. போக்குவரத்துக்காக இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் போக்குவரத்துத் துறையினரின் பேருந்துகளைப் பயன்படுத்துதல். 27ஆம் திகதி காலை 4 மணி தொடக்கம் நண்பகல்1மணிவரை யாழ்ப்பாணம்பேருந்து நிலையத்தில் இருந்து பேருந்துகள் புறப்படும்.
4. பக்தர்களுக்கு 28ஆம் திகதி காலை உணவு இலவசமாக வழங்குதல்.
5. கடற்படையினரின் ஒழுங்கமைப்பில் கச்சதீவில் ஒரு அம்புலன்ஸ் படகும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஒழுங்கமைப்பில் 2 அம்புலன்ஸ் வாகனங்கள் குறிகாட்டுவானிலும் தயார் நிலையில் இருத்தல்.

இந்தக் கலந்துரையாடலில், யாழ்ப்பாண மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் அடிகளார், வடமாகாண கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் லியனகமகே, இந்திய துணைத் தூதரக அதிகாரி நாகராஜன், நெடுந்தீவு பிரதேசசபையின் தவிசாளர், மேலதிக மாவட்டச் செயலர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பாதுகாப்பு படைகளின் அதிகாரி, யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், மாவட்ட உதவிச் செயலாளர், நெடுந்தீவு பிரதேச செயலாளர், வேலணை பிரதேச செயலாளர், ஊர்காவற்றுறை பிரதேச செயலாளர், கடற்படை அதிகாரிகள், மருத்துவ அதிகாரிகள், சுங்கத் திணைக்கள அதிகாரிகள், துறைசார் திணைக்களங்களின் தலைவர்கள், படகு உரிமையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-ம-26)

## ஊடகப்...

விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 17 வருடங்கள் கடந்துள்ள நிலையில், ஏன் இன்னமும் நீதி நிலைநாட்டப்படவில்லை? என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க கேள்வி எழுப்பினார். இதன்போதே, இந்த விடயம் தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.
லசந்த விக்கிரமதுங்கவின் படுகொலை தொடர்பில் மட்டுமல்ல, அனைத்து ஊடகவியலாளர்களின் படுகொலைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பிலும் நாங்கள் விசாரணை நடத்துவோம். இந்த விடயத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை நாம் வெளிப்படையாக அறிவித்துள்ளோம். அதில் மாற்றங்கள் இல்லை என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க மேலும் கூறினார். (அ-ம-44)

## காணிகள்...

அறிவிப்பை வெளியிடுவார் என நம்பப்படுகின்றது.
யாழ்ப்பாணம் தையிட்டி திஸ்ஸ விகாரை உள்ளிட்ட பல்வேறு ஆக்கிரமிப்புகள் தொடர்பிலும், மன்னார் முள்ளிக்குளத்தில் கடற்படையால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்புத் தொடர்பிலும் அண்மைக்காலமாக பெரும் பரபரப்பான நிலையே காணப்படுகின்றது.
இவ்வாறான நிலையிலேயே, யாழ்ப்பாணத்திலும் மன்னாரிலும் வைத்து காணி விடுவிப்புகள் தொடர்பில் பல விசேட அறிவிப்புகளை ஜனாதிபதி அநுர வெளியிடுவார் என்று நம்பப்படுகின்றது. (அ-ம-26)

## ஜனவரி 15ஆம்...

மேற்கொள்ளவுள்ளார். இரண்டு தினங்களைக் கொண்டதாக அவருடைய பயணம் அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பொங்கல் விழாவில் ஜனாதிபதி கலந்து கொள்வது உறுதியாகியுள்ளது. அத்துடன் போதைப்பொருளுக்கு எதிராக விழிப்புணர்வு நிகழ்வுகளிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (அ-ம-26)

## முள்ளிக்குளம்...

துள்ளது. நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில், ஜனாதிபதியின் தலைமையில் பாதுகாப்பு அமைச்சு சார்ந்த ஆலோசனைக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது, கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள மன்னார் - முள்ளிக்குளம் கிராமம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக்காட்டினார். இதையடுத்தே, முள்ளிக்குளம் கிராமத்தை விடுவிப்பதற்கு ஜனாதிபதியும் கடற்படையினரும் சம்மதம் தெரிவித்தனர்.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்ததாவது:-
மன்னார் சிலாவத்துறை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராமம் கடற்படையால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்றேன். அத்தோடு முள்ளிக்குளம் மக்களின் நிலைமைகள் தொடர்பிலும் இதன்போது தெளிவுபடுத்தினேன். முள்ளிக்குளம் கிராமத்தில் வாழ்ந்த 400 வரையான குடும்பங்கள் கடந்த 1990ஆம் ஆண்டு தமது சொந்த இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தனர். அதன்பின்னர் கடந்த 2002ஆம் ஆண்டு 300 வரையான குடும்பங்கள் மீளக்குடியேறியதுடன், அதில் 150 வரையான குடும்பங்களுக்கு வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டிருந்தன. எனினும், அசாதாரண சூழ்நிலை காரணமாக கடந்த 2007ஆம் ஆண்டு முள்ளிக்குளம் கிராம மக்கள் மீளவும் இடம்பெயர்ந்தனர். இதற்குப் பின்னர் இதுவரை அந்த மக்கள் மீளக் குடியேற்றப்படவில்லை. முள்ளிக்குளம் கிராமமக்கள் தற்போது அயற் கிராமங்களான காயாக்குழி மற்றும் மலைக்காடு ஆகிய கிராமங்களில் பலத்த சிரமங்களுடன் வாழ்ந்து வருகின்றனர்.
2002ஆம் ஆண்டு மீள்குடியேற்றத்தின்போது முள்ளிக்குளத்தில் மக்களுக்கு அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில் தற்போது கடற்படையினரின் குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். முள்ளிக்குளம் கிராமத்தில் கடற்படையின் ஆக்கிரமிப்பிலுள்ள குடியிருப்புக்காணிகள், தோட்டக்காணிகள், வயற்காணிகள், குளங்கள், கடற்றொழிலுக்காக மீனவர்களால் பயன்படுத்தப்படும் இறங்குதுறைகள் என எவையும் இதுவரை விடுவிக்கப்படவில்லை. இந்த விடயங்கள் தொடர்பில் நான் மிகவும் தெளிவாக ஜனாதிபதிக்குக் கூறியிருக்கின்றேன்.
இதையடுத்து, முள்ளிக்குளம் பகுதியில் விடுவிப்புக்குத் தயாராக இருப்பதாக ஜனாதிபதியும் கடற்படையினரும் தெரிவித்துள்ளனர் - என்றார். (அ-ம-26)

## அம்பாந்தோட்டைக்கு...

கரையைக் கடப்பதற்குச் சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கணித்துள்ளது.
தாழமுக்கத்தின் நகர்வுகள் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்தால் நேற்று இரவு வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
தாழமுக்கத்தின் நகர்வுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பிந்திய கணிப்பின்படி அம்பாந்தோட்டை கல்முனைக்கும் இடையே தாழமுக்கம் கரையைக் கடப்பதற்குச் சாத்தியங்கள் உள்ளன. பெரும்பாலும் இன்று மாலை 5.30 மணிக்கும் இரவு 11.30 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் கரையைக் கடப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன - என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்.மாவட்டத்திலுள்ள இரத்தினக்கற்கள் மற்றும் தங்க நகை வர்த்தகர்களுக்கான இரத்தினக்கற்கள் வியாபார உரிமம் மற்றும் தங்கநகை வியாபார பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கான ஒருநாள் நடமாடும் யாழ்.வணிகர் கழகத்தால் நடத்தப்படவுள்ளது.

இந்த ஒருநாள் நடமாடும் சேவை எதிர் வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் பி.ப. 2.30மணி வரை இல.165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள யாழ்.வணிகர் கழக பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சேவையில் தங்கநகை செய்வோரும், இரத்தினக்கல் விற்பனையாளர்களும் கலந்துகொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.வணிகர் கழகம் அறிவித்துள்ளது. (ச-41)

# விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜன.9

நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் காணப்படும் ஆளணி வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆண், சுகாதாரப் பணியாளர் ஆண் / பெண் ஆகியவற்றுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆர்வமுடையவர்கள் தமது பெயர் மற்றும் விவரங்களை எதிர்வரும் 13ஆம் திகதிக்கு முன்னர் நெடுந்தீவுப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ச-41-9)

# இயற்கை அனர்த்த எதிர்வுகூறல்; கால்நடைகளைப் பாதுகாக்கவும்

வடமாகாணம் உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் மிகவும் கனத்த மழை பெய்வதற்கான சாத்தியம் அதிகமாகக் காணப்படுவதாக எதிர்வுகூறப்படும் நிலையில் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றுமாறு தெல்லிப்பழைச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பண்ணையாளர்களுக்கு முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தாழ்ந்த நிலப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடிய பிரதேசங்களில் கால்நடைகளை வைத்திருக்கும் பண்ணையாளர்கள் குறித்த இடங்களிலிருந்து பாதுகாப்பான பகுதிகளுக்குத் தமது கால்நடைகளை மாற்றுவதன் மூலம் பேரழிவைத் தவிர்க்கலாம் என்றும் தெல்லிப்பழை சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவகலாநிதி ப.நந்தகுமார் அறிவுறுத்தியுள்ளார். (ச-66)

**வேலையாட்கள் தேவை**

மாம்பழம் சந்தியில் உள்ள உணவகத்திற்கு
- ✓காசாளர்
- ✓சமையல் உதவியாளர்
- ✓சமையல் செய்பவர்
- ✓மாலை நேர சமையல் உதவியாளர்

தேவை

தொடர்பு: 077 593 0335

(CS 31219) ER

**மணல் விற்பனை/ பொமிட் போட்டு தரப்படும்.**

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ் மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டு தரப்படும். ரூபா - 35000/-

தொடர்புகளுக்கு: 076 324 9977

(CS/60312) J-1

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**



முன்னனி நிறுவனத்தில் இணைந்து பணியாற்ற, சுறுசுறுப்பும் அர்ப்பணிப்பும் மிக்க பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (Security Officers) உடனடியாகத் தேவைப்படுகிறார்கள்.

- வயதெல்லை: 19 -60 வயதிற்குட்பட்டவர்கள்
- சம்பளம்: 40.000 - 70.000 ரூபா வரை (அனுபவம், கல்வித்தகைமை என்பவற்றுக்கமைய தீர்மானிக்கப்படும்)



ஆர்வமுள்ளவர்கள் உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.


உங்கள் சுயவிபரக் கோவையை மின்னஞ்சலிலோ அல்லது தபாலிலோ சமர்ப்பிக்கலாம்.

மின்னஞ்சல்: apply.vacancy2026@gmail.com

P.O. Box - 23

# மரண அறிவித்தல்

## வண.போதகர்.கலாநிதி சாம்சன் குலநாயகம் இராஜசூரியர்



யாழ்ப்பாணம், கட்டுடை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், ஏஞ்சல் சர்வதேச பாடசாலை, மேதர்ஸ் லேன், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வண. போதகர். கலாநிதி. சாம்சன் குலநாயகம் இராஜசூரியர் அவர்கள் கடந்த 04.01.2026 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சாமுவேல் K.இராஜசூரியர் - அலிஸ் பொன்னம்மா இராஜசூரியர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சாமுவேல் குணரத்தினம் - மேசி குணரத்தினம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்டனட் தேவகி இராஜசூரியர் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான Christy, Issac, Kingsly மற்றும் Dr.Dan (Australia), Walter (Canada), Pushpam (Australia), Indrani (Australia) ஆகியோரின சகோதரனும், காலஞ்சென்ற Ranjee (ரஞ்சி) மற்றும் Janaki, Nanthan (Australia), Mohan (UK), Santhi ஆகியோரின் மைத்துனரும், Nilanthy, Priranthy (Swiss), Samuel (UK) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்ற Rohan, Mohan (Swiss), Vidthiya (UK) ஆகியோரின் மாமனாரும், Dilani (Australia), Richy (Australia), Dr.Sonali (Australia), Priscilla (Swiss), Joel (Swiss), Joushua (Swiss), Myleene (UK), ஆகியோரின் பேரனும், Ezra (Australia), Aria (Australia), Zeke (Australia), Brian (Swiss), Dylan (Swiss) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை நாளை (10.01.2026) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் Angel International School பிரதான ஒன்றுகூடல் மண்டபம், மானிப்பாயில் நடைபெற்று, அன்னாரின் சரீரம் சகல மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டு, C.A.C.M திருச்சபையின் சேமக்காலையில் (பிப்பிலி) நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Angel International School
Mather's Lane, Manipay.

தகவல் :
குடும்பத்தினர்.
Nilanthy (மகள்)
077 71 23 915

(CS 31222) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111
விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.01.2026.இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.